# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 755/7—1993 පෙබරවාරි 24 වැනි බදාදා—1993.02.24

755/7 ஆம் இலக்கம் – 1993 ஆம் ஆண்டு பெப்புருவரி 24 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I) — பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.—பி.21/78 III

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

திருமதி சீ.எஸ். கருணாரத்ன,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1993, பெப்புருவரி 15.

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம், தொழிலாளர் கல்வி நிறுவக (திருத்த) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 1993 மாச்சு 1 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. 1990 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க தொழிலாளர் கல்வி நிறுவக (திருத்த) கட்டளைச்சட்டத்தினால் திருத்தப்பட்டு 1990 திசெம்பர் 27ஆந் தேதிய 642/9ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டவாறான 1979 திசெம்பர் 26ஆந் தேதிய 68/10ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட 1979ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க தொழிலாளர் கல்வி நிறுவகக் கட்டளைச் சட்டத்தின் 11ஆம் பந்தியானது, அப்பந்தியின் 2ஆம் உட்பந்தியின் (அ) என்னும் வாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வாசகத்தை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

> "(அ) நிறுவகத்தின் கற்கைச் சபையின் உறுப்பினர்களிடையேயிருந்து அத்தகைய கற்கைச் சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒவ்வொரு கற்கைச் சபையிலிருந்தும் இரண்டு உறுப்பினர்கள் ; அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவர் அத்தகைய சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும்".

03—125/2